# சடங்குகள் பரம்பரைக்குப் புத்துயிர்

## புதிய தலைமுறையை சிறந்த மனித குணங்களோடு இணைத்து வைப்போம்

இங்கே நமது மேன்மைமிகு கலாச்சாரப் பரம்பரையின் அடிப்படையில் உயர்ந்த மாமனிதர்களின், மனித ரத்னங்களின் வளர்ச்சி மிகப்பெரிய அளவில் நடைபெற்று வந்துள்ளது என்பது பாரதத்தின் விசேஷமாக இருந்துள்ளது. இந்த அடிப்படையில் தான் இது முப்பத்து முக்கோடி தேவர்களின் நாடு. ஜகத்குரு என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

பாரத்தின் ரிஷிகளும், ஞானிகளும், மனிதன் தனக்குள்ளே அளவற்ற திறமையை மலரச் செய்ய முடியும் என்பதை அனுபவத்தில் கண்டுள்ளார்கள், மலரும் திறமை சரியான திசையில் திருப்பப்பட்டால், அவனுக்கும், சமுதாயத்திற்கும் மகிழ்ச்சியை, முழுத் திருப்தியைத் தரமுடியும். ஆனால் அதுவே திசை தவறிவிட்டால், அவனுக்கும் சமுதாயத்திற்கும் அமைதியின்மையைத் தரும். மனிதனுக்கு விரும்பிய திசையிலேயே செல்வதற்கு வெளிக்கட்டுப்பாடு பயன்படுவதில்லை. அவனுக்கு உள்ளிருந்தே சரியான பாதைக்கான உற்சாகமும், ஸங்கல்பமும் (உறுதியும்) எழ வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டார்கள். இந்த முடிவின் அடிப்படையில் தான் அவர்கள் மனிதனின் குணம்-செயல்-இயல்புகளை முழு மனிதத் தன்மையைத் தூய்மைப்படுத்துவதற்கு, பண்படுத்துவதற்கு மிக அதிக சிறப்பைத் தந்தார்கள்.

சடங்குகளின் பொருள் வாழ்க்கையை கட்டுக் கோப்பாக்குவது, ஒழுங்குப்படுத்துவது. திறமைசாலியான தோட்டக்காரன் செடிகளுக்கு உரமும், நீரும் இட்டு, அவற்றை வெட்டியும், கழித்தும், அழகாகவும் கட்டமைப்பாகவும் மாற்றிக் கொண்டிருப்பது போல மனித வாழ்வைப் பயன்படுத்துவதற்கு அவன் உணர்வுகள், சிந்தனைகள், சங்கல்பங்கள், நடவடிக்கைகள், பயிற்சிகள், இவற்றை தூய்மைப்படுத்த வேண்டியுள்ளது. இந்த சூக்ஷ்மமான, ரகசியமான செயல்முறைகளை எல்லோரும் இயல்பாகவும், எளிதாகவும் செய்வதற்காக, ரிஷிகள் சடங்கு முறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தினார்கள். அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு சிறந்த திருப்பங்களுக்கும் சடங்குகளை நிர்ணயித்தார்கள். கண்ணுக்குத்

தெரியக்கூடிய செயல்களுடன் ஆன்மிக தெய்வீக, மனோதத்துவக் கோட்பாடுகளையும், செயல்முறைகளையும் திறம்பட இணைத்து, வெவ்வேறு சடங்குகளை பெரும்பயன் உடையவனாக முன்னிலைப்படுத்தினார்கள். சடங்குகளின் இந்த வரிசைக்கிரமம் கர்ப்பதானச் சடங்கில் இருந்து இறப்பிற்குப் பின்னால் ஆன சடங்கு வரை தொடர்ந்து செய்யப்படுகிறது.

நமது ரிஷி க்ரந்தங்களிலும், தர்மஸூத்தரங்களிலும் 40 எண்ணிக்கை வரையிலான சடங்குகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால் ஷோடஷ (பதினாறு) சடங்குகளை நடத்துவது பல காலமாக சாலச் சிறந்ததாக உள்ளது. எதுவரை சடங்குகளின் புண்ய பரம்பரை திறமையுடன் செயல்படுத்தப்பட்டதோ, அதுவரை மனித மாணிக்கங்களின் வளர்ச்சிக் கிரமம் தடையின்றி நடைபெற்றது. அந்த பரம்பரை மறைந்த போது, மறக்கப்பட்ட போது, மனிதத்தன்மையின் பார்வையில், தாழ்ச்சி, ஏமாற்றம் உயிரற்ற தன்மை பெருகி, குறுகிய சுயநலத்திற்காக மற்றவர்களைச் சுரண்டும் மனிதர்களின் எண்ணிக்கை பெருக ஆரம்பித்தது. அடையாள பூஜையின் வடிவில் இன்றும் அங்காங்கே சடங்குகளின் கண்மூடித்தனமான செயல் நடைபெறுகிறது. ஆனால் அவற்றால் எந்தப் பயனும் விளைவதில்லை. அவற்றில் மனிதத்தன்மையில் மாற்றத்திற்கான தூண்டுதல், தாக்கத்தைத் தரக்கூடிய மக்கள் கல்வி, இவை இருப்பதில்லை, மேலும் வெறும் செலவு மட்டுமே இருப்பதால் அவை மாறாக சுமையாக மாறிவிட்டன.

யுக ரிஷி (வேதமூர்த்தி, தபோநிஷ்டர், பண்டிதர் ஸ்ரீராம் சர்மா ஆச்சார்யா) அவர்கள் இன்றைய யுகத்தின் எல்லாப் பிரச்சனைகளையும் ஆழப்படித்தார். மேலும் அவற்றிற்கான சமயோசிதமான விடைகளையும் வெளிப்படுத்தினார். இந்த முறையில் தான் அவர் சடங்கு முறைகளுக்கு உயிரூட்டுவதற்கான திட்டத்தையும் நடத்தினார். அவர் சடங்குகளுக்கு அறிவு பூர்வமாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் ஒப்புக்கொள்ளக்கூடிய வடிவம் தந்தார். அவற்றுடன் ஆழ்ந்த மக்கள் கல்வியையும் இணைத்தார். கர்மகாண்டத்தை எளிதானதாக, தாக்கமுள்ளதாக, குறைந்த செலவுள்ளதாக ஏற்படுத்தினார். யுக நிர்மாணத் திட்டத்தில் அவற்றின் வெற்றிக்கரமான பிரயோகத்தைப் பெரிய அளவில் உருவாக்கினார். இதற்காக அவர் வழக்கிலுள்ள சடங்குகளில்

இன்றைய காலத்திற்கேற்ப 12 சடங்குகள் மட்டுமே (பும்ஸவனம், நாமகரணம், சூடாகர்மம்–சிகைஸ்தாபனம், அன்னப்ராஸனம், வித்யாரம்பம், தீக்ஷையக்ஞோபவீதம், விவாஹம், வானப்ராஸ்தம், அந்த்யேஷ்டி, மரணோத்தரம், பிறந்தநாள் விழா மற்றும் திருமண நாள் விழா) போதுமென்று கருதினார். இந்த சடங்குகளைக் குறித்த நேரத்தில், குறிப்பிட்ட சூழ்நிலையில் நிறைவேற்றும், நிறைவேற்றி வைக்கும் அசாதாரண லாபத்தை மக்கள் பெற்றுள்ளனர். அவற்றின் சுருக்கமான விபரம் பின்வருமாறு :

<u>1. பும்ஸவனம் (கர்ப்பச்சடங்கு) :</u> சடங்குப் பரம்பரையில் நம்பிக்கை உள்ள பெற்றோருக்கு, உடலளவிலும், மனதளவிலும், பூரண பக்குவம் பெற்ற பின்னரே சமுதாயத்திற்கு உன்னதமான, தேஜஸ் நிறைந்த, புதிய தலைமுறையைத் தருவோம் என்ற சங்கல்பத்துடன், குழந்தை பெறுவதற்கான முயற்சி செய்தல் வேண்டும் என்ற உண்மை புரிய வைக்கப்படுகிறது. கர்ப்பம் நிலைத்தது என்பது உறுதியான பின்பு, அன்னையின் உணவு, நடத்தை, வெளித்தொடர்பு, சிந்தனை, உணர்வுகள் எல்லாவற்றையும் மேன்மையாகவும், மன நிறைவுள்ளதாகவும் மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்கு அனுகூலமான சூழ்நிலையையும் ஏற்படுத்த வேண்டும். கர்ப்பத்தின் மூன்றாம் மாதம் முறைப்படி பும்ஸவன சடங்கை நடத்தி வைக்க வேண்டும். ஏனென்றால் இந்த சமயத்திலேயே கர்ப்பத்திலுள்ள குழந்தையின் எண்ண ஓட்டத்தின் வளர்ச்சி ஆரம்பமாகி விடுகிறது. வேத மந்திரங்கள், யக்ஞச் சூழல், சடங்கின் கோட்பாடுகளின் தூண்டுதல், இவற்றால் குழந்தையின் மனதில் மேன்மை மிக்க தாக்கம் ஏற்படுகிறது என்பது மட்டுமல்ல. காப்பாளர்கள் மற்றும் உறவினர்களுக்கும் கூட, அன்னைக்கு சிறந்த மனோநிலை மற்றும் சூழ்நிலை இவற்றை எவ்வாறு மலரச் செய்வது, என்பதற்கான தூண்டுதல் ஏற்படுகிறது.

<u>2. நாமகரணம் :</u> குழந்தையின் பெயர் அதற்கு ஒரு அடையாளத்தை ஏற்படுத்துவதற்காக மட்டும் வைக்கப்படுவதில்லை. மனோத்துவம் மற்றும் எழுத்து விஞ்ஞானம் இவற்றை அறிந்தவர்கள். பெயரின் தாக்கம் பரு உடலிலும், சூக்ஷ்ம (நுண்) உடலிலும் மிக ஆழமாகப் பதிகிறது என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். பெயரை யோசித்துப் புரிந்து கொண்டு வைத்தல் வேண்டும். அதனுடன் பெயருக்கு ஒளி தரும் குணங்களைப்

பற்றியும் விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம். நாமகரணச் சடங்கில் இந்த குறிக்கோளை அறிவுத்தும் மேன்மையான கோட்பாடுகள் இணைந்துள்ளன.

<u>3. சூடாகர்மம்</u> (மொட்டையடித்தல், குடுமி வைத்தல்) : வெளிப்பார்வைக்கு பிரசவ நேரத்தில் தலையில் வந்த முடிவுகளை எடுத்துத் தலையை சுத்தமாக்குவது அவசியமாகிறது. சூக்ஷ்ம நோக்கில் தலையை சுத்தமாக்குவது அவசியமாகிறது. சூக்ஷ்ம நோக்கில் குழந்தையின் அறிவு வளர்ச்சி, கெட்ட எண்ணங்களை அழித்தல், உயர்ந்த எண்ணங்களின் வளர்ச்சி. இவற்றிற்கான விழிப்புணர்வு அவசியம், பரு, நுண்ணிய குறிக்கோள்களை ஒன்றாக இணைத்து இந்த சடங்கின் வடிவம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனுடனே குடுமி வைக்கும் சங்கல்பமும் இணைந்துள்ளது. நாம் மேன்மையான ரிஷிகளின் கலாச்சாரத்தைப் பின்பற்றுபவர்கள் நம்மிடம் மிக உயர்ந்த குறிக்கோள்களுக்கான நம்பிக்கை மற்றும் முயற்சி செய்தல் இருக்க வேண்டும். இந்த சங்கல்பத்தை எழுப்புவதற்கான அடையாளமாக உடலின் மிக உயர்ந்த பாகமாகிய கலாச்சாரக் கொடியாக குடுமி வைக்கப்படுகிறது.

<u>4. அன்னப்ராஸனம் :</u> குழந்தையின் பற்கள் முளைக்க ஆரம்பிக்கும் போது. இயற்கை குழந்தைக்கு திட உணவு, அன்ன உணவுக்கான ஏற்பாட்டை முதன்மைப்படுத்துகிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பரு உடல் (அன்னமயகோஷம்) வளர்ச்சிக்காக உணவின் விஞ்ஞானபூர்வமான உபயோகத்தின் அறிவு அவசியம் என்பதை எல்லோரும் அறிவார்கள். சூக்ஷ்ம விஞ்ஞானத்தின்படி உணவில் முற்பிறப்பு மற்றும் தயாரிப்போரின் வினைத்தாக்கம், மனிதனின் மன இயல்பின் மீதும் படிகிறது. உணவுக்கேற்ப மனம் அமைகிறது என்ற கூற்று உள்ளது. எனவே உணவு ருசியாக இருப்பதுடன், தூய்மை, வினையற்ற தன்மை, இவற்றிற்காக குழந்தையின் காப்பாளர்கள் மற்றும் உறவினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகிறது. உணவைக் கெட்ட பழக்கமாக இல்லாமல், மருந்து ப்ரஸாத வடிவங்களில் ஏற்க வேண்டும். இந்த சங்கல்பத்துடன் அன்னப்ராஸன சடங்கு நடத்தப்படுகிறது.

<u>5. வித்யாரம்பம் :</u> குழந்தைக்குக் கல்வியை கிரகித்து கொள்ளும் தகுதியுடைய வயது வந்ததும், வித்யாரம்ப சடங்கு செய்யப்படுகிறது.

அதில் ஒரு பக்கம் விழாவின் மூலமாக குழந்தைக்குப் படிப்பதற்கான உற்சாகம் ஊட்டப்படுகிறது. மறுபக்கம் குழந்தையின் காப்பாளர்கள், ஆசிரியர்களுக்கும், குழந்தைக்கு எழுத்தறிவு, விஷய அறிவு இவற்றுடன் உயர்ந்த கோட்பாடுகளையும் அறிவுறுத்திப் பயிற்சி தர வேண்டும் என்ற, அவர்களின் இந்தத் தூய, மேன்மையான பொறுப்பைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

<u>6. தீக்ஷை யக்ஞோபவீதம் :</u> குழந்தையின் (பையனின் / பெண்ணின்) உடல் மற்றும் மன வளர்ச்சி, தனது முன்னேற்றத்திற்காக மனப்பூர்வமாக உறுதியும், முயற்சியும் செய்வதற்குத் தகுதி பெறும்போது, உயர்ந்த ஆன்மிக, சமூக கட்டளைக்குச் செயல்படுத்துவதற்காகக் கட்டுப்படுத்தும் சங்கல்பம் செய்து வைக்கப்படுகிறது. தீக்ஷைகளின் பொருள் மேன்மையான லக்ஷியத்தை அடைவதற்கான நிச்சயமான உறுதியுடன் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட ஸாதனையில் ஈடுபாடு கொள்ளுதலாகும். மனிதன் உலகியல் செயல்களில் சிக்கிக் கொண்டு, வாழ்வின் உயர்ந்த லக்ஷியங்களைப் புறக்கணித்து விடக்கூடாது. உலகியலுடன் ஆன்மிக லக்ஷியங்களைக் குறித்தும் விழிப்புணர்வோடும், முயற்சியோடும் இருத்தல் வேண்டும் என்ற நோக்கத்தில் தான் தீக்ஷைச் சடங்கு செய்யப்படுகிறது. வாழ்வில் கர்மத்தின் மிக உயர்ந்த, யக்ஞயக் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு நடக்கின்ற சங்கல்பத்துடன் யக்ஞோபவீதச் சடங்கு செய்யப்படுகிறது. பண்டைய காலத்தில் குருகுலத்தில் இரண்டு சடங்குகளும் ஒன்றாகவே நடத்தப்பட்டன. தற்காலத்தில் மனப்பாங்கு மற்றும் சூழ்நிலைக்கேற்ப இவை தனித்தனியாகவோ, ஒன்றாகவோ செய்யப்படுகின்றன.

<u>7. விவாஹம் (கல்யாணம், திருமணம்) :</u> சிறந்த இல்லற வாழ்விற்கு, குடும்ப நிர்வாகத்திறக்கு உண்டான பொறுப்பைத் தாங்குவதற்கான தகுதி, உடல் பக்குவம், மனப்பக்குவம் வரும் போது, இளைஞனுக்கும், யுவதிக்கும், திருமணச் சடங்கு நடத்தப்படுகிறது. பாரத கலாச்சாரத்தின்படி, விவாஹம் என்பது வெறும் உடல் மற்றும் சமூகத் தொடர்புடையது மட்டுமன்று, இங்கே மணவாழ்விற்கு ஒரு உயர்ந்த ஆன்மிக ஸாதனையின் வடிவம் தரப்பட்டுள்ளது. (இல்லறம் ஒரு தவம்) இதனால் தான், 'தன்யோ க்ரிஹஸ்தாஷ் ரமஹ' (இல்லறம் அதிர்ஷ்டம்) என்று கூறப்பட்டுள்ளது. நல்ல இல்லறம் தான் சமுதாயத்திற்கு அனுகூலமான நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிக்கு உதவுவதோடு,

மேன்மைமிக்க புதிய தலைமுறையை உருவாக்கும் பணியையும் செய்கிறது. இல்லறம் தான் தனது பொருட்செல்வத்தால் ப்ரஹ்மச்சரிய, வானப்ராஸ்த மற்றும் சந்நியாச ஆஸ்ரமங்களின் ஸாதகர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்து தருகிறது. இந்த சிறந்த இல்லற வாழ்வை ஏற்படுத்துவதற்கு, திருமணத்தை மூடப் பழக்கங்கள், தீய நடவடிக்கைகள் இவற்றிலிருந்து விடுவித்து, உயர்ந்த சடங்கின் வடிவில் மறுபடி நிலை நிறுத்துவது அவசியமாகிறது. யுக நிர்மாணத் திட்டத்தில் விவாஹச் சடங்கின் குடும்ப, சமுதாயப் பிரயோகம் வெற்றிகரமானது, உபயோகமுள்ளது என்பது உறுதியாக்கப்பட்டுள்ளது.

<u>8. வானப்ராஸ்தம் :</u> இல்லறத்தின் கடமைகளை முடிந்த அளவு சீக்கிரமாக முடித்துக் கொண்டு, வாரிசுகளிடம் தனது செயல்களை ஒப்படைத்து, தனிது தனித்தன்மையைச் சிறிது சிறிதாக சமுதாய, பொறுப்புமிக்க, முக்தியை நாடும் செயல்களில் முழுவதுமாக ஈடுபடுவதற்காக வானப்ராஸ்த சடங்கு செய்யப்படுகிறது. இந்த அடிப்படையில் தான் சமுதாயத்திற்குப் பக்குவமடைந்த, அனுபவமுள்ள, பற்றற்ற மக்கள் தொண்டர்கள் கிடைக்கிறார்கள். சமுதாயத்தில் பரவியுள்ள வேண்டத்தகாதவை, கெட்ட நடவடிக்ககைள், தவறான வழிகள், இவற்றிலிருந்து நிவாரணம் மற்றும் நல்ல நடவடிக்கைகள், நல்ல உபயோகங்களின் வளர்ச்சிக்கான பொறுப்பை நிவேதனமாக இவர்கள் ஏற்க முடியும். இது தான் மிக உயர்ந்த சமூக ஸேவை, இது முக்தியுடன் மேன்மையான ஆன்மிக லாபத்தையும் பெற்றுத் தருவதில் வெற்றி பெறுகிறது. யுக நிர்மாணத் திட்டத்தில் இவர்களாலும் பயனுள்ள, வெற்றிகரமான பிரயோகங்கள் ஏற்பட்டுள்ளன.

<u>9. அந்த்யேஷ்டி :</u> 'மரணம்' வாழ்க்கையின் ஒரு மாற்ற முடியாத உண்மையாகும். இதை கிழட்டுத் தன்மைக்கு இளமைத் துடிப்புள்ள வாழ்க்கையின் வடிவத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பெரும் தெய்வம் என்று கூடச் சொல்லலாம். உயிர்ப் பிரக்ஞை ஒரு யக்ஞயச் செயல்முறையில் ஐந்து தத்துவங்களில் இருந்து அதற்கு விடையளிக்கும் கிரமமாகவே ஒரு யக்ஞயச் சடங்கின் வடிவைத் தெய்வ கலாச்சாரம் தந்துள்ளது. இதை மகிமையுள்ள முறையில் ஏற்றுக் கொண்டு செய்ய வேண்டும்.

**10. மரணோத்தர (சிரார்த்த சடங்கு) :** வாழ்க்கை ஒரு தடங்கலற்ற நீரோட்டம், உடல் விழுந்த பின்னரும் கூட ஜீவனின் பயணம் முடிவதில்லை. மரணத்தின் பிந்தைய கிரமம் கூட நல்ல முறையில், சரியான திசையில் செல்ல வேண்டுமென்பதற்காக சிரார்த்த சடங்கு செய்யப்படுகிறது. நுண்ணிய மின் அலைகளின் மூலம் விஞ்ஞானிகள் தூரத்தில் உள்ள உபகரணங்களையும் இயக்கி விடுகின்றனர். (ரிமோட் ஆபரேஷன்) சிரத்தை அதையும் விட அதிக சக்தியுள்ள அலைகளை அனுப்பக்கூடியது. அதன் மூலம் பித்ருக்களுக்கும், நண்பர்கள், உறவினர்களின் உயிர்ப் பிரக்ஞைக்கும் வழி மற்றும் சக்தி இவற்றை அவர்களின் திருப்தியை முதன்மையாக்கிச் செய்ய முடியும். சிரார்த்த சடங்கின் மூலமாக நமது இந்தத் திறமையின் பிரயோகத்தால் முன்னோர்களுக்கு நற்கதி தரவும், அவர்களது ஆசீர்வாதம் பெறவும் வகை செய்யப்படுகிறது.

**11. பிறந்தநாள் விழா :** மனிதன் எல்லா உயிர்களிலும் மிக மேலானவன் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. படைப்பவர் நம்மை மிக மேன்மையான வாழ்வில் உயர்த்தித் தந்த தூய புண்யகாலம் பிறந்தநாள் ஆகும். மேன்மையான வாழ்வை முதன்மைப்படுத்தியதோடு படைப்பவர் அதே தகுதியில் சிறந்த நடத்தையையும் எதிர்பார்க்கிறார். நாம் அவரை ஏமாற்றாமல் நமக்குள் உயர்ந்த மனிதர்களின் குணங்களின் வளர்ச்சிக்காக சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். இதற்காக நமது இனிய நண்பர்கள், உறவினர்கள் நல்வாழ்த்துக்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். யுக ரிஷி பிறந்த நாளுப்பு அறிவு பூர்வமான சடங்கு வடிவம் தந்துள்ளார்.

**12. திருமணநாள் விழா :** எவ்வாறு வாழ்க்கையின் ஆரம்பம் பிறப்பில் ஏற்படுகிறதோ, அவ்வாறே குடும்பத்தின் ஆரம்பம் மணவாழ்வில் தொடங்குகிறது. மேன்மையான குடும்பமும், அதன் மூலம் சிறந்த சமுதாயமும் ஏற்படுவதற்கான சுபமுயற்சி திருமணச் சடங்கில் இருந்து தொடங்குகிறது. ஈருடல் ஓருயிர் ஆகும் தவம். இந்த தினத்தில் இருந்து ஆரம்பமாகிறது. எனவே தான் திருமணநாள் விழாவையும் ஒரு சிறந்த புண்யகாலமாகக் கருதி, இத்தினத்திற்காக யுக ரிஷி வடித்துள்ள சடங்கால் பயன்பெற வேண்டும்.

பாரத்ததை மீண்டும் ஒரு தன்னிகரற்ற நாடாக ஆக்க வேண்டும். இதற்காக மேன்மைமிகு மனிதர்களின் தேவை பெரும்

எண்ணிக்கையில் உள்ளது. அவர்களை மிளிரச் செய்வதற்கு இந்த சடங்குகள் அதிகம் உபயோகப் படக்கூடும். ஒவ்வொரு சிந்தனையாளரும், நம்பிக்கை உள்ளவரும் இதில் கண்டிப்பாக இணையவேண்டும். ஷாந்திகுஞ்ச் ஹரித்வார்., காயத்ரி தபோபூமி, மதுரா, இவற்றுடன் எண்ணற்ற காயத்ரீ சக்தி பீடங்கள், காயத்ரீ சேதனா கேத்திரங்கள், ப்ரக்ஞா பீடங்கள், ப்ரக்ஞா கேந்திரங்கள் ஆகியவற்றில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எல்லாப் பிரிவுகளிலும் யுக புரோகிதர்கள் உருவாக்கம் செய்யப்படுகிறார்கள். அறிவுள்ளவர்கள், நம்பிக்கையுள்ளவர்கள் இதன் பயனை அடைவதிலும், எல்லாத் தரப்பு மக்களிடமும் எடுத்துச் செல்வதிலும், முழு ஒத்துழைப்புத் தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


அகில உலக காயத்ரி பரிவார்

ஷாந்திகுஞ்ஜ், ஹரித்வார் (உத்தரகாண்ட்) 249 411.

செல் : +91 92583 60651

இ-மெயில் : south@awgp.in வெப்சைட் : www.awgp.org


**"அஸ்வமேத காயத்ரி மஹா யாகம்"**

**உங்களை அன்புடன் வரவேற்கிறது**

**2016 ஜனவரி 28 முதல் 31 வரை**

**இடம் : விவேகானந்தா கேந்திரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு, தென்னிந்தியா**

இ-மெயில் : gck.kanyakumari@awgp.in (கோ ஆர்டினேட்டர்)

## GAYATRI PARIWAR TAMILNADU CENTERS

| | | | |
|---|---|---|---|
| Chennai | : 9003149639, 9962929214 | Nagercoil | : 8939353511, 9362823000, 9442365447, LL : 04652-230447 |
| Coimbatore | : 9442334658, 9629868215 | | |
| Erode | : 9443340509, 9962101366 | Salem | : 9443697145, 9345763347 |
| Jolarpet | : 9443151947, 9443556702 | Tambaram | : 9789081148, 9789883921 |
| Kanchipuram | : 8939353511, 9444914836 | Tirupur | : 9789402824, 9994218924 |
| Madurai | : 944290000, 9344100600 | Tuticorin | : 8903516632 |
| Marthandam | : 9443145332, 9443148688 | Tirunelveli | : 9894947517, 9952052410 |


